**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – 2017–2018ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு – அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள தொழுநோயால் பாதிக்கப்பட்டோருக்கான பராமரிப்பு உதவித் தொகையினை ரூ.1000/–லிருந்து ரூ.1,500/–ஆக உயர்த்தி வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 22** | **நாள்: 07.06.2017**
**ஹேவிளம்பி – வைகாசி, 24**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**
**படிக்கப்பட்டது:**

1. 2017–2018ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு நாள் 16.03.2017.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 484/மஇ.நிர்.(3)/2015, நாள் 22.06.2016 மற்றும் 31.08.2016.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் அறிக்கை நாள் 11.04.2017.

--------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட 2017–2018ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை குறித்து பின்வருமாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:–

> ''கடுமையாக கை, கால் பாதிக்கப்பட்டவர்கள், தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையாக 1,500 ரூபாய் அரசினால் வழங்கப்பட்டு வருகிறது. தொழுநோயிலிந்து மீண்ட பிறகும் கடும் நிரந்தர பாதிப்பிற்கு உள்ளானவர்களுக்கும் இந்த உயர்த்தப்பட்ட மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையான 1,500 ரூபாயை இந்த அரசு வழங்கும்''.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர் இயலாதோராக (Disabled) கருதப்பட்டதன் அடிப்படையில் அத்தகையோருக்கு 2012–2013 முதல் பராமரிப்பு படி(Maintenance Allowance)யாக ஏனைய கடுமையாக பாதிக்கப்பட்டோர் மற்றும் தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோருக்கு இணையாக மாதம் தோறும் ரூ.1000/– வழங்குவதற்கான திட்டம் தொடங்கப்பட்டது. மாதாந்திர பராமரிப்புப் படி 2014–2015 முதல் ரூ.1500/– ஆக உயர்த்தப்பட்டபோது, தொழுநோயால் இயலாமை அடைந்தோருக்கான பராமரிப்புப் படி திருத்தியமைக்கப்படவில்லை. 2016–2017 நிலவரப்படி, தற்போது 5729 தொழுநோயால் பாதிக்கப்பட்டு இயலாமை நிலையில் உள்ளோர் பராமரிப்பு படியினை மாதம் ரூ.1000/– வீதம் பெற்று வருகின்றனர். இதனை ரூ.1500/– என திருத்தியமைப்பதால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.343.74 இலட்சம் கூடுதல் செலவு ஏற்படும் எனத் தெரிவித்துள்ளார்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அறிக்கையில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் தற்போதைய கணக்கெடுப்பின்படி தொழுநோயால் பாதிக்கப்பட்ட 6166 பயனாளிகள் பயனடைய ஏதுவாக பராமரிப்பு உதவித் தொகையினை ரூ.1,000/–லிருந்து ரூ.1,500/– ஆக உயர்த்தி வழங்கும் பட்சத்தில் ரூ.3,69,96,000/– (6166 x 500 x 12) செலவினம் ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

[த.பி.பா.]

4. 2017–2018ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஏற்று, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரக அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள 6166 தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதமொன்றுக்கு வழங்கப்படும் பராமரிப்பு உதவித் தொகையினை ரூ.1,000/–லிருந்து இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் ரூ.1,500/– ஆக உயர்த்தி வழங்கிட ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்ட கூடுதல் செலவினத்தை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

"2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 – சமூக நலன் 104 முதியோர், இயலாமையற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – மாநில செலவினங்கள் – KQ தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல் – 09 உதவித் தொகை–03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை [த.தொ.கு 2235–02–104–KQ-0938]"

6. மேலே பத்தி 4–ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.70,52,000/– 2017–2018ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2017–2018ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் ஒரு குறிப்பிட்ட தொகையை சேர்ப்பதன் மூலம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டு, இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி–4ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி–4ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை 2017–2018ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித்(ச.ந.) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை, நிதித் துறையின் அலுவல் சாரா எண் 28610/நிதி(சந)/2017, நாள் 06.06.2017 மற்றும் கூடுதல் பேரேட்டு எண் 632 (அறு நூற்று முப்பத்தி இரண்டு)ன்படி, வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், (மு.கூ.பொ.) சென்னை–5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மூலமாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.

**<u>நகல்:</u>**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித் (ச.ந / வ.செ.பொ.I/II) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச் செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்